# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

புதன்கிழமை 13.10.2021 | supeedsam.com | supeedsam@gmail.com





# சர்வதேச, பொருளாதார ரீதியில் அழுத்தத்தினைக் கொடுத்து இலங்கையை பேச்சுக்கு அழையுங்கள்

### மட்டக்களப்பின் வளங்கள் பறிபோகின்றன; மண்வளம் சுரண்டப்படுகிறது

## தூதுவர்களுக்கும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்குமிடையில் சந்திப்பு





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கொவிட் சூழ்நிலையின் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நோர்வே மற்றும் நெதர்லாந்து நாட்டு தூதுவர்கள் நேற்று விஜயமொன்றினை மேற்கொண்டு பல்வேறுபட்ட தரப்பினர்களையும் சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தனர்.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்த இரு நாட்டு தூதுவர்களுடன் மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனுடன் விசேட கலந்துரையாடலொன்றில் ஈடுபட்டுள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...

## நோர்வே மற்றும் நெதர்லாந்து தூதுவர்களிடம் மாநகரசபை முதல்வர் சரவணபவன் எடுத்துரைப்பு



(துதிமோகன்)

சர்வதேச ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் ஒரு அழுத்தத்தினைக் கொடுத்து இலங்கையை பேச்சுவார்த்தை மேசைக்கு எடுத்து தமிழர்களுக்குரிய தீர்வைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர்

02 ஆம் பக்கத்தில்...

## காணி அபகரிப்பு, தொல்பொருள் அத்துமீறல்கள் குறித்து நோர்வே,நெதர்லாந்து உயர்ஸ்தானிகர்களுக்கு விளக்கம்



### சாணக்கியன் அளித்தார்

(ரக்ஸனா)

இலங்கைக்கான நோர்வே உயர்ஸ்தானிகர் மற்றும் நெதர்லாந்து உயர்ஸ்தானிகர் ஆகியோரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன்

02 ஆம் பக்கத்தில்...

## சட்டவிரோதமான முறையில் நியுசிலாந்து செல்ல முற்பட்ட 63 பேர் திருமலையில் கைது



(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

சட்டவிரோதமான முறையில் நியுசிலாந்து செல்ல முற்பட்ட 63 பேர் திருகோணமலையில் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

02 ஆம் பக்கத்தில்...

## வியாழேந்திரனுடனும் தூதுவர்கள் சந்திப்பு



(கல்லடி நிருபர்)

கொவிட் சூழ்நிலையின் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நோர்வே மற்றும் நெதர்லாந்து நாட்டு தூதுவர்கள் இன்றைய தினம் விஜயமொன்றினை மேற்கொண்டு பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனை அவரது மட்டக்களப்பிலுள்ள அமைச்சின் அலுவலகத்தில் சந்தித்தி விசேட கலந்துரையாடலொன்றில் ஈடுபட்டுள்ளார்கள்.

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பு கல்வி வலயமானது கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு முரணாகச் செயற்படுகின்றது

### இ.ஆ.ச.மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர்



(துதிமோகன்)

மட்டக்களப்பு கல்வி வலயமானது கல்வி அமைச்சினால் வெளியிட்டுள்ள சுற்றுநிருபத்திற்கு முரணாக எவ்வித சுகாதார வழிமுறைகளையும் பேணாமல் மாணவர்களை பரீட்சை எழுதும்படி அழைப்பித்துள்ளார்கள் என இலங்கை ஆசிரியர் சங்க மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் பொ.உதயரூபன் தெரிவித்துள்ளார்.

மட்டு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர்

02 ஆம் பக்கத்தில்...






## கிராம மக்களுக்கு முன்னுரிமை அளித்து வரவு- செலவுத் திட்ட முன்மொழிவுகள் பெற்றுக்கொள்ளப்படும்



(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

கிராமத்துடனான கலந்துரையாடல் தேசிய அபிவிருத்தி திட்டத்திற்கு அமைய 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட

02 ஆம் பக்கத்தில்...

## அலரி மாளிகையில் 'சுவாமி'



அலரி மாளிகையில் இடம்பெற்ற நவராத்திரி விழாவில் பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் மாநிலங்களவை உறுப்பினருமான சுப்பிரமணியன் சுவாமி கலந்துகொண்டிருந்தார்.

இந் நிகழ்வு நேற்று மாலை இடம்பெற்றிருந்தது. இதில் பிரதமர் மகிந்த ராஜபக்ச, பிரதமரின் மனைவி ஷிராந்தி ராஜபக்ச உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

முன்னதாக நேற்று காலை இலங்கை வந்த சுப்பிரமணியன் சுவாமியை இராஜாங்க அமைச்சர் டி.வீ சானக மற்றும் பிரதமரின் இணைப்பு

02 ஆம் பக்கத்தில்...







## கிராம மக்களுக்கு முன்னுரிமை அளித்து

முன்மொழிவுகள் பெற்றுக்கொள்ளும் நோக்கில் திருகோணமலை மாவட்டத்தின் பிரதேச செயலகம் தோறும் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் பெற்றுக்கொள்ளப் பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் மொரவெவெ மற்றும் கோமரன்கடவெல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் இன்று உரிய பிரதேச செயலகங்களில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமாகிய கபில அத்துகோரல தலைமையில் நடைபெற்றது.

கிராமிய மக்களுடைய அபிவிருத்தி தேவைகளை கிராமிய மக்களிடமிருந்து பெறுவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்து உள்ளது. அதன் மூலமாக கிராமம் அபிவிருத்தியடையும். அத்துடன் கிராமத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும். எனவே கிராம மக்களுக்கு முன்னுரிமை அளித்து இந்த வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் பெற்றுக்கொள்ளப் பட்டு வருவதாக இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

அரசாங்கம் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தற்போது பல அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதன் மூலமாக கிராம மக்களுடைய வாழ்வாதாரம் மேம்பட கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். உற்பத்தி கிராம வேலைத்திட்டம் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாக காணப்படுகின்றது. வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் கிராம மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்வதன் மூலமாக உண்மையான தேவைகளை இனங்கண்டு பூர்த்தி செய்யக் கூடியதாக அமையும்.

நிதி அமைச்சர் கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் இம்முன்மொழிவை கிராமிய மக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கியதாகவும், கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான காத்திரமான பல திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட உள்ளதாகவும் இதன்போது அரசாங்க அதிபர்கள் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்தார்.

பிரதேச செயலக ரீதியாக பெற்றுக் கொள்ளப்பட்ட குறித்த திட்ட முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு எதிர் வரும் வருடங்களில் அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற நிதி உதவிகளை பெற்றுக்கொண்டு கிராமத்தின் தேவைகள் கிரமமான முறையில் பூர்த்தி செய்வதற்கு இத்திட்ட முன்மொழிவு ஏதுவாக அமையும். கிராம அடிப்படையில் பெறப்படும் திட்ட முன்மொழிவுகளை அடிப்படையாக கொண்டு மாவட்டத்திற்கான அபிவிருத்தி திட்ட முன்மொழிவு தயாரிக்கப்படவுள்ளதாக இதன்போது அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரிய பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உரிய பிரதேச செயலாளர்கள், பிரதேச அரசியல் தலைமைகள் உட்பட பொது மக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## அலரி மாளிகையில் ‘சுவாமி’

செயலாளர் செந்தில் தொண்டமான் ஆகியோர் வரவேற்றனர்.

இந்நிலையில், நேற்று மாலை அலரி மாளிகையில் இன்று இடம்பெற்ற நவராத்திரி விழாவில் அவர் கலந்துகொண்டிருந்தார். இதேவேளை, இலங்கை இராணுவத்தின் 72வது நிறைவையொட்டி நடத்தப்படும் இராணுவ கருத்தரங்கிலும் அவர் உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வியாழேந்திரனுடனும் தூதுவர்கள் சந்திப்பு

நோர்வே நாட்டு தூதுவர் டிரின் ஜொரான்லி எஸ்கெடல் , நெதர்லாந்து நாட்டு தூதுவர் டஞ்ஜா கொங்கிரிஜ்ப் ஆகிய இருவரும் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது குறித்த கலந்துரையாடலின் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக் களப்பு மாவட்டத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள், அபிவிருத்திப் பணிகள் மற்றும் அரசியல் சார்ந்த செயற்பாடுகள் போன்றவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்தோடு எமது மக்களுக்கு தேவைப்பாடாகவுள்ள பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புதல், நிலையான வாழ்வாதார வழிவகைகள் மற்றும் கிராமிய மட்ட உட்கட்டமைப்பு விடயங்கள் உள்ளிட்ட மேலும் பல விடயங்கள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் கலந்துரையாடியுள்ளதுடன் இவற்றிற்கான சாதகமான பதில்களை இரண்டு நாட்டு தூதுவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாக இராஜாங்க அமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## காணி அபகரிப்பு, தொல்பொருள்

சந்தித்து பேசியுள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று நண்பகல் குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்டத்தை எதிர்காலத்தில் முன்னேற்றும் செயல்பாடுகளில் முதன்மையான தகவல்

தாழில் நுட்பத்துறை மற்றும் இயற்கை அழகுடன் காணப்படும் மட்டக்களப்பு மாவட்ட சுற்றுலா துறையை மேம்படுத்தும் பல திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், மட்டக்களப்பில் இடம்பெற்றுவரும் காணி அபகரித்தல் சட்டவிரோத குடியேற்றம் மற்றும் மண் அகழ்வு உள்ளிட்ட பிரச்சனைகள் குறித்து ஆராயப்பட்டதுன், இதற்கான ஆதாரங்களுடன் கூடிய ஆவணமும் கையளிக்கப்பட்டது.

இதன்போது சாணக்கியன் விசேட கோரிக்கை ஒன்றினையும் முன்மொழிந்திருந்தார். குறிப்பாக தொல்பொருள் எனும் பெயரில் காணிகள் சூறையாடப்படுவதை தடுக்கும் நோக்குடன் தொல்பொருள் சம்பந்தமான செயற்பாடுகள் அனைத்தும் யுனெஸ்கோ அமைப்பின் ஊடாக சர்வதேச கண்காணிப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

இதன்மூலம் நாம் எதிர்கொள்ளும் சட்டவிரோத காணி அபகரிப்பு போன்ற பிரச்சினைகளை தடுக்க முடியும் என இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார். அத்துடன், இன்றைய குறித்த சந்திப்பானது சமகால அரசியல் பரிமாற்றத்துடன் முற்றுப்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.






## வெளிக்கள உத்தியோகத்தர்கள் இருவரும் பிணையில் விடுதலை

(தலவாக்கலை பி.கேதீஸ்)

மஸ்கெலியா பிளான்டேசன் கம்பனியின் கீழ் இயங்கும் தலவாக்கலை கட்டுக்கலை தோட்டத்தில் இரு பெண் தொழிலாளர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அத்தோட்ட உதவி வெளிக்கள உத்தியோகத்தர்கள் இருவரையும் பிணையில் விடுவிக்க நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் அனுமதி வழங்கினார்.

கடந்த மாதம் 28ம் திகதி கட்டுக்கலை தோட்டத்தில் தொழிலாளர்கள் சிலருக்கும் அத்தோட்ட உதவி அதிகாரி மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் கைகலப்பில் முடிந்துள்ளது.

இதன்போது தோட்ட தொழிலாளர்கள் சிலரால் அத்தோட்ட உதவி அதிகாரி மற்றும் உதவி வெளிக்கள உத்தியோகத்தர்கள் இருவர் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் நுவரெலியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்தனர்.

தோட்ட உதவி அதிகாரி மற்றும் உதவி வெளிக்கள உத்தியோகத்தர்களால் தாக்கப்பட்டதாக இரு பெண் தொழிலாளர்களும் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்தனர்.

குறித்த பெண் தொழிலாளர்கள் இருவர் அன்றையதினம் வழங்கிய முறைப்பாட்டையடுத்து அத்தோட்ட உதவி வெளிக்கள உத்தியோகத்தர்கள் இருவர் தலவாக்கலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 8ம் திகதி வெள்ளிக்கிழமை நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது இருவரையும் எதிர்வரும் 12ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவு விட்டிருந்தார்.

நேற்று 12 ம் திகதி அவர்களை மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியபொழுது இவர்களை தலா ஒரு இலட்சம் ரூபாய்ப்படி சரீரப் பிணைகளில் விடுவிக்க நீதிபதி உத்தரவிட்டார். மேலும் இந்த வழக்கு விசாரணணை டிசம்பர் மாதம் 7ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## மட்டக்களப்பு கல்வி வலயமானது கல்வி அமைச்சின்

இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன் அவர் போது மேலும் தெரிவிக்கையில்,

13ம் திகதி சாதாரணதர, உயர்தர மாணவர்களுக்கு பரீட்சை நடத்துவது தொடர்பாக சுற்றுநிரூபம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு பெற்றோர்களுக்குத் தொலைபேசி மூலம் பலவந்தப்படுத்தி இந்தப் பரீட்சையில் கட்டாயம் ஈடுபட வேண்டும் என மட்டக் களப்பு கல்வி வலயத்தினால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இன்று கிழக்கு மாகாணத்தைப் பொருத்த வரையில் 55 ஆரம்பப் பாடசாலைகளும் எதிர் வரும் 21ம் திகதி திறப்பது சம்மந்தமாக கல்வி அமைச்சினால் சுற்றுநிரூபம் அனுப்பப்பட்டுள்ளது. அந்த சுற்றுநிரூபத்தின்படி சுகாதார நடைமுறைகளைப் பேணி இந்தப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதோடு சுகாதார அதிகாரிகளும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் மட்டக்களப்பு கல்வி வலயமானது கல்வி அமைச்சினால் வெளியிட்டுள்ள சுற்றுநிரூபத்திற்கு முரணாக எவ்வித சுகாதார வழி முறைகளையும் பேணாமல் மாணவர்களை பரீட்சை எழுதும்படி அழைப்பித்துள்ளார்கள்.

பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தடுப்பூசி வழங்கப்பட்ட பின்னர் தான் பாடசாலை ஆரம்பிக்கப்பட வேண்டும் என எமது ஆசிரியர் சங்கத்தின் வலியுறுத்தியிருக்கின்றது. ஆனால் இந்த வலியுறுத்தலையும் மீறி மாணவர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

சுகாதாரப் பணிப்பாளரின் அறிக்கையின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டமே மிகக் குறைந்த தடுப்பூசிகளைப் பெற்ற மாவட்டமாக இனங்காணப்பட்டுள்ளது. 28 வீதான வர்களே தடுப்பூசிகளைப் பெற்றிருக்கின்றார்கள். மிகக் குறைந்த அளவினர் தடுப்பூசியைப் பெற்ற இந்த மாவட்;டத்தில் இவ்வாறு மாணவர்களைப் பரீட்சைக்குத் தோற்றும்படி கேட்டிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்க விடயாகும்.

கடந்த காலங்களிலும் இவ்வாறான பரீட்சைகள் முன்னெடுக்கப்பட்டு பெரும்பாலான பணம் செலவழிக்கப்பட்டது. அவ்வாறு பணம் செலவழிக்கப்பட்டும் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்பதியாக அமையவில்லை. கடந்த காலத்தில் உயர்தரத்தில் மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட 94 மாணவர்கள் விஞ்ஞான பாடத்தில் ஒரு சித்தியும் பெறாதவர்களாக இருக்கின்றார்கள். அதேபோல் சாதாரண தரத்தில் 55 மாணவர்கள் ஒரு பாடமும் சித்தியடையாதவர்களாக இருக்கின்றார்கள்.

இவ்வாறான நிலைமையில் தற்போது மாணவர்கள் உளரீதியான தாக்கங்களுடன் எந்தப் பாடத்திட்டத்தினைப் பூர்த்தி செய்திருக்கின்றார்கள், எந்த வகையில் அவர்களுக்குப் பரீட்சைகளை வைக்க வேண்டும என்ற ஏற்பாடுகள் இல்லாமல் அவர்கள் பரீட்சைக் குத் தோற்றும்படி வற்பறுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

இது தொடர்பில் கிழக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்வி செயலாளருடனும் தொடர்பினை ஏற்படுத்தி கிழக்கு மாகாணத்தில் இந்தக் கல்வி வலயத்தில் மட்டும் சுகாதார சுற்றுநிரூபத்தை மீறி ஏன் இவ்வாறான திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என வினவியிருந்தேன். ஆனால் இதற்கு அவர்களிடமிருந்து எவ்வித பதிலும் இல்லை.

மாணவர்களை ஆயத்தப்படுத்துவதற்கு கல்வி அமைச்சின் சுற்றுநிரூபத்தின்படி பாடசாலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அதே நேரம் கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர்களின் இடமாற்ற விடயம் பெரும் பிரச்சனையாக இருக்கின்றது. அதற்கான எவ்வித நடவடிக்கைகளும் இல்லாமல் பல ஆசிரியர்கள் உளரீதியாகப் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றார்கள். ஆசிரியர்களைப் பற்றிச் சிந்திக்காத கிழக்கு மகாண ஆளுநர், கல்விச் செயலாளர் ஆகியோர் இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பரீட்சையொன்றை நடத்துவதென்பது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயம்.

மாணவர்களுக்கான பாடத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை, கடந்த வருடம் 65 நாட்களே பாடசாலைகள் நடைபெற்றிருக்கின்றன. இதன்படி நாங்கள் உரிய தரப்பினரிடம் அறிவித்தமைக்கமைவாக திட்டமிடப்பட்டிருந்த பரீட்சைகளான புலமைப்பரிசில் மற்றும் உயர்தரப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளது.

பாடத்திட்டங்கள் எந்த அளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்ற விடயம் தெரியாதிருக்கும் போது இந்த கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் பரீட்சையை மையப்படுத்தி மாணவர்களைப் பலவந்தப்படுத்தி பரீட்சைகளில் அவர்களை ஈடுபடச் செய்வதை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

## சட்டவிரோதமான முறையில் நியுசிலாந்து செல்ல முற்பட்ட

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துறைமுக வீதியிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் தங்கி இருந்த அறுபத்தி மூன்று பேரை கைது செய்துள்ளதாகவும் இவர்கள் யாழ்ப்பாணம் முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் பெண்ணொருவர் உட்பட இரண்டு சிறுவர்களும் அடங்குவதாகவ தெரியவருகின்றது. கடந்த 15 நாட்களாக குறித்த நபர்கள் வெவ்வேறு இடங்களிலிருந்து வருகை தந்து குறித்த தனியார் விடுதியில் தங்கி இருந்ததாக அரச புலனாய்வுத் துறைக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களை திருகோணமலை தலைமை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகள் செய்து வருவதாகவும், விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

## சர்வதேச, பொருளாதார ரீதியில் அழுத்தத்தினைக் கொடுத்து

சரவணபவன்,இலங்கைக்கான நோர்வே மற்றும் நெதர்லாந்து தூதுவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நோர்வே மற்றும் நெதர்லாந்து தூதுவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டதுடன் பல்வேறு சந்திப்புகளையும் இன்று மேற்கொண்டனர்.

இந்த விஜயத்தில் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவனை சந்தித்த நோர்வே நாட்டு தூதுவர் மற்றும் நெதர்லாந்து நாட்டு தூதுவர் ஆகியோர் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்களை முன்னெடுத்தாக மாநகரசபை முதல்வர் தெரிவித்தார். இந்த நாட்டில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் தூதுவர்களின் கவனத்திற்கு கொண்டுவந்தாகவும் முதல்வர் தெரிவித்துள்ளார்.

இதன்போது மட்டக்களப்பு மாநகரசபையினால் இரண்டு திட்டங்கள் தூதுவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் மாநகர முதல்வர் தெரிவித்தார்.

இந்த சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த மாநகரசபை முதல்வர்,

இன்று வருகை தந்த நோர்வே மற்றும் நெதர்லாந்து தூதுவர்களிடம் மட்டக்களப்பு மாநகரசபையின் செயற்பாடுகள் சம்பந்தமாகவும், அரசியல் ரீதியில் மாநகரசபையின் அபிவிருத்திச் செயற்பாடுகள் எவ்வாறு தடைப்படுகின்றது என்பது தொடர்பிலும் கலந்துரையாடினோம்.

அத்துடன் மாநகரசபையூடாக இரண்டு திட்டங்கள் தூதுவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன. நெலதர்லாந்து தூதுவரிடம் ஆற்றினை ஆளப்படுத்தவதற்கான இயந்திர விடயமும், நோர்வே சிநேக பாலமொன்று காந்திப்பூங்காவில் இருந்து பொதுச்சந்தைக்குச் செல்லும் வகையிலான பாலமொன்றுக்கான திட்டமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நாங்கள் பல்வேறு தூதுவர்களிடமிருந்து நிதிகள் பெற்றுக் கொடுத்தலும் இங்குள்ள நிருவாகத் திறமையின்மை காரணமாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அபிவிருத்திகளைச் செய்து விடக் கூடாது என்ற காரணத்திற்காகவும் எம்மால் கொண்டுவரப்படும் நிதிகள் சரியான முறையில் சரியான நேரத்தில் பயன்படுத்தப்படவில்லை.

இதே போன்று ஜப்பான் தூதுவரின் வருகையின் போது இவ்வாறான திட்டங்களைக் கொடுத்து அதன்மூலம் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், பதினொரு மாதங்கள் முடிந்த நிலையில் இன்னும் அந்த வேலை முடிக்கப்படவில்லை. இவ்வாறான நிலைமையே எமது மாநகரசபையில் இருக்கின்றது.

மேலும், அரசியல் ரீதியில் 13வது திருத்தச்சட்ட அமுலாக்கம், மட்டக்களப்பின் பரம்பல் நிலையை மாற்றியமைப்பதற்காக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற குடியேற்றத் திட்டங்களான மாதவணை, மயிலத்தமடு, கெவிலியாமடு தற்போது எதிர்வரும் 21ம் திகதி குடியேற்றத் திட்டமிடப்பட்டிருக்கின்ற காரமுனை போன்ற விடயங்கள் தொடர்பிலும் நாங்கள் கலந்துரையாடியிருந்தோம்.

சர்வதேச ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் ஒரு அழுத்தத்தினைக் கொடுத்து இலங்கையை பேச்சுவார்த்தை மேசைக்கு எடுத்து தமிழர்களுக்குரிய தீர்வைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளோம்.

மேலும் மட்டக்களப்பின் வளங்கள் பறிபோவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. மட்டக்களப்பின் மண்வளம் சுரண்டப்படுதல் மற்றும் மக்களின் பொருளாதாரத்தைப் பாதிக்கக்கூடியதாக இருக்கின்ற விடயங்கள் தொடர்பிலும் அவர்களுடன் கலந்துரையாடினோம்.

மேலும் மிக முக்கிய விடயமாக நாங்கள் அரசியற் தீர்வை நோக்கி நகரும் இத்தருவாயில் எமக்கான அரசியற் தீர்வு கிடைப்பதற்கிடையில் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்ற 2020 - 2030ம் ஆண்டு மற்றும் 2050ம் ஆண்டு திட்டங்களை நிறுத்தாவிடின் எமக்கான அரசியற் தீர்வு கிடைக்கும் போது இங்கு தமிழர்களுக்கு என்று இடம் இருக்காது.

முதலில் அவ்வாறான திட்டங்கள் அமுல்படுத்துவதனை நிறுத்துவதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதோடு, எமது அரசியற் தீர்வுக்கான அழுத்தங்களும் கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளோம் என மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் சரவணபவன் தெரிவித்தார். .

## தூதுவர்களுக்கும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க

நோர்வே நாட்டு தூதுவர் டிரின் ஜொரான்லி எஸ்கெடல் , நெதர்லாந்து நாட்டு தூதுவர் டஞ்ஜா கொங்கிரிஜ்ப் ஆகிய இருவருமே குறித்த கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது குறித்த கலந்துரையாடலின் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வளங்கள் தொடர்பாக அரசாங்க அதிபரினால் விளக்கமளிக்கப்பட்டதுடன், அரசாங்கத்தினால் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் மாவட்ட மக்களுக்கு தேவைப்பாடாக உள்ள விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்தோடு மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புதல், நிலையான வாழ்வாதார வழிவகைகள் மற்றும் கிராமிய மட்ட உட்கட்டமைப்பு விடயங்கள் உள்ளிட்ட மேலும் பல விடயங்கள் தொடர்பில் இதன் போது கலந்துரையாடியுள்ளதுடன், இரு நாட்டுத் தூதுவர்களையும் கௌரவிக்கும் முகமாக மாவட்ட அரசாங்க அதிபரினால் நினைவுப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

குறித்த சந்திப்பில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந்த், காணிப்பிரிவிற்கான மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.நவரூபரஞ்ஜனி முகுந்தன்,

மாவட்ட செயலக பிரதம கணக்காளர் கே.ஜெகதீஸ்வரன், உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காய்வாளர் திருமதி. இந்திராவதி மோகன்,மாவட்ட செயலக நிருவாக உத்தியோகத்தர் கே.தயாபரன், மாவட்ட செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜதீஸ்குமார் உள்ளிட்ட மாவட்ட செயலக உயரதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

# சேதனப் பசளையை பயன்படுத்தி நெல் உற்பத்தியை மேற்கொள்வது சாத்தியமான பெறுபேறுகளை தரமாட்டாது

## மன்னார் விவசாயிகள் தெரிவிப்பு

**(வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் மாவட்டத்தில் சேதனப் பசளையை பயன்படுத்தி நெல் உற்பத்தியை மேற்கொள்வது சாத்தியமான பெறுபேறுகளை தரமாட்டாது எனவும் இதனால் மன்னார் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிப்புகளுக்கு உள்ளாகும் என மன்னார் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளதாக நடப்பு வருட காலபோக நெற்செய்கை சம்பந்தமான முன்னோடி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் பிரதானமான குளமாக விளங்கும் கட்டுக்கரைக்குளத்தின் கீழ் 2021 2022 ஆண்டுக்கான தற்பொழுது மேற்கொள்ளப்பட இருக்கும் காலபோக நெற்செய்கை தொடர்பாக முன்னோடி கூட்டம் கடந்த வாரம் கட்டுக்கரைகுளத் திட்ட வதிவிட திட்ட முகாமையாளர் கே.டி.மீஜக்கப் தலைமையில் முருங்கனில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் விவசாய அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள், விவசாய திணைக்களம் மற்றும் நீர்பாசன அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதில் தெரிவிக்கப்பட்டதாவது. சேதனப் பசளையை பயன்படுத்தி நெல் உற்பத்தியை மேற்கொள்வது சாதகமான பெறுபேறுகளை தரமாட்டாது எனவும், மன்னார் விவசாயிகளின் வாழ்வாதாரம் இதனால் பாதிப்புகளுக்கு உள்ளாகுமெனவும் எனவே இவ்விடயம்பற்றி மன்னார் அரசாங்க அதிபரூடாக கோரிக்கையை அரசாங்கத்துக்கு முன்வைக்கும்படி விவசாயிகளால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் இவ் கூட்டத்தில் மாகாண விவசாய விரிவாக்க உதவிப்பணிப்பாளரின் பிரதிநிதியாக கலந்துகொண்ட நானாட்டான் பகுதி விவசாய போதனாசிரியரால் சேதனப் பசளை உற்பத்தி முறைபற்றி விளக்கவுரை வழங்கப்பட்டது.

சேதனப் பசளையுடன் கலப்பதற்கு நைதரசன், மூலக்கூறு அடங்கிய பொதி திரவமாகவோ திண்மமாகவோ வழங்கப்படும் எனவும் பொஸ்பேற்றை தமது கமநலகேந்திர நிலையங்களில் தற்போது பெற்றுக்கொள்ள முடியுமெனவும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரால் இவ் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

# சுகாதார பரிசோதகர் கௌரவிப்பும், மரக்கன்று அன்பளிப்பும்

**(எப்.முபாரக்)**





திருகோணமலை பாலையூற்று கூம்புகார் பகுதியில் பொதுச் சுகாதார பரிசோதகராக கடமையாற்றி வரும் ரமணன் தேவராஜ் என்பவரை பொது மகளினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்நிகழ்வு திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. கொரோனா காலத்தில் பூம்புகார் கிராம சேவகர் பிரிவு மக்களுக்கு சிறப்பாக தமது கடமையை திறம்படசெய்து மக்களை பாதுகாத்த சுகாதார பரிசோதகர் என்ற வகையில் பொன்னாடை நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

பாலையூற்று பகுதியிலுள்ள கிராம மக்கள் சார்பாக பிரதேச சபை அங்கத்தவர்,மகளிர் அணி, சமுர்த்தி சங்கம், இளைஞர்கள் அனைவரும் இணைந்து இந்த கௌரவிப்பு நிகழ்வினை நடாத்தியுள்ளார்கள்.

இதன் போது பூம்புகார் கிராம சேவகர் பிரிவு மக்களுக்கு ஸ்பெயின் நாட்டில் வசிக்கும் நேதாஜியின் வழிகாட்டலில் கப்பல் வாழைக் குட்டி மற்றும் எலுமிச்சை கன்றுகளும் பொதுச் சுகாதார பரிசோதகரால் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# சமாதான நீதவானாக சத்தியபிரமாணம்



**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் தலவாக்கலையை வசிப்பிடமாக கொண்ட தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தின் பிரதம குருக்கள் பிரசாந்த் சர்மா என்பவர் தீவு முழுவதற்குமான அகில இலங்கை சமாதான நீதவானாக கடந்த 8ம் திகதி நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஜி.ஜி.ஜி.ஜெயசிங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துக்கொண்டார்.

முத்துசாமி ஐயர் அமரர் சந்திரகுமாரி தம்பதிகளின் புதல்வாரன இவர் பம்பலபிட்டி இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீ வித்தியா குரு குலத்தில் வேதாகம கல்வியை கற்றவர் ஆவார்.

மேலும் இவர் சர்வதேச இந்து மத பீடத்தின் நிர்வாக உறுப்பினரும் நுவரெலியா மாவட்ட சர்வமத செயற்குழு, தேசிய சமாதானப் பேரவையின் உறுப்பினரும் ஆவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக நேற்பயிர் செய்கைக்கான ஆரம்பப் பணிகள் ஆரம்பம்





**(ஏ. எல்.எம்.ஷினாஸ்)**

அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக நெற்பயிர் செய்கைக்கான ஆரம்பப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இம்முறை அம்பாறை மாவட்டத்தில் சுமார் 89200 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது என அம்பாறை மாவட்ட விவசாய பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. கலீஸ் தெரிவித்தார். பெரும்போக நெற்பயிர் செய்கை தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்டத்தின் டீ.எஸ்.சேனநாயக்கா சமுத்திரத்திலிருந்து பெரும்போக நெற்காணிகளுக்கான நீர் வழங்கப்படவுள்ளது. இதே நேரம் பாசன நீரை நம்பாது மழையை மாத்திரம் நம்பி நெற்செய்கையை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இம்முறை சேதனப்பசளையை பயன்படுத்த வேண்டியதன் அவசியம் மற்றும் அதன் பயன்பாடு குறித்தும் விவசாயிகளை அறிவுறுத்தியுள்ளோம். இதற்காக 60 வீதமான சேதனப் பசளைகளை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

விவசாயிகள் சேதனப்பசளைகளை கொள்வனவு செய்வதற்கு ஒரு ஏக்கருக்கு 5000.00 மானியமாக வழங்கப்பட்டுள்ளன. நஞ்ஞற்ற உணவு உற்பத்தியை மேற்கொள்ளும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் இம்முறை நெற்பயிர் செய்கையை மாவட்டத்தில் முன்னெடுப்பதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரைகளுடன் நபரேருவர் கைது

**திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்**

திருகோணமலை காந்திநகர் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரைகள் போன்றவற்றை தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இளைஞரொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை பிராந்திய போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருக்கு நேற்று கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து குறித்த விளக்கத்தை சோதனையிட்ட போது அவரிடம் இருந்து 600 போதை மாத்திரைகள் மற்றும் 4250 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அனுராதபுர சந்தி காந்தி நகர் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் எனவும் தெரியவருகின்றது.

கைது செய்யப்பட்ட குறித்த இளைஞரை உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் விசாரணையின் பின்னர் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# கோட்டக்கலை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**



கடந்த நல்லாட்சி அரசாங்கத்தையோ மலையக வீடமைப்புக்கு பொறுப்பாக இருந்த அமைச்சரையோ விமர்சிப்பது இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் நோக்கம் கிடையாது. அமரர் ஆறுமுகன் தொண்டமானால் கொண்டு வரப்பட்ட இந்திய வீடமைப்புத் திட்டத்தினூடாக பயனாளிகளுக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்பதே அவரது விருப்பம் ஆகும் என கொட்டகலை பிரதேசசபைத் தலைவர் ராஜமணி பிரசாந்த் தெரிவித்தார்.

நேற்று 12ம் திகதி இடம்பெற்ற சபையின் மாதாந்த அமர்வில் தலைமை வகித்துப் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

இந்த மாதாந்த அமர்வுக்கு தலைவர் உட்பட 16 உறுப்பினர்கள் சமூகமளித்திருந்தனர். அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில் கொட்டகலை பிரதேச சபை எல்லைக்குள் 90 வீதம் கொவிட் 19 தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. நடக்க முடியாதாவர்களுக்கு வீடு வீடாகச் சென்று தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. ஏனையோருக்கும் விரைவில் வழங்கப்படும். பாடசாலைகள் விரைவில் ஆரம்பமாகும் போது மாணவர்களுக்கு உதவும் வகையில் புலமைப் பரிசில், சாதாரண தரம், உயர்தரம் ஆகியவற்றுக்கு முன்னோடிப் பரீட்சைகளை இலவசமாக நடத்துவதற்கும், நடமாடும் வாசிகசாலைகளை அமைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எமது பிரதேச சபைக்குட்பட்ட இளைஞர், யுவதிகள் விளையாட்டுப் பயிற்சிகளைப் பெறுவதற்காக கொட்டகலை விளையாட்டு மைதானம் பல இலட்ச ரூபா செலவில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானால் புனரமைக்கப்பட்டுள்ளது.

இரவு நேரத்தில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு வசதியாக மின்வெளிச்சமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா பரவல் குறைந்து வரும் நிலையில் எதிர்காலத்தில் இளைஞர்கள் மைதானத்தை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அடுத்த மாதம் எமது சபையின் 2022 க்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதற்கான ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன. உறுப்பினர்களின் புதிய யோசனைகளும் வரவேற்கப்படுகின்றது. உறுப்பினர்களுக்கு 2022 இல் அபிவிருத்திப் பணிகளுக்கான நிதி 2 இலட்ச ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், பிதேச சபை உறுப்பினர்களுக்கு கட்சி பேதம் இல்லாமல் தலா 4 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ள பிரதமருக்கும் நிதியமைச்சருக்கும் சபையின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய வீடமைப்புத் திட்டம் 2012 ஆம் ஆண்டு அப்போதைய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் காலத்தில் சோனியா காந்தி அம்மையார் ஊடாக ஆறுமுகன் தொண்டமானால் கொண்டுவரப்பட்ட திட்டமாகும்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் 4000 வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் ஆட்சி மாற்றம் காரணமாக பல வீடுகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ளன.

அவற்றுக்கு மின்சாரம், குடிநீர், வீதி அபிவிருத்தி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து புனரமைப்பதற்காக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் 526 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார். அதேநேரம், நல்லாட்சி அரசாங்கத்தையோ, மலையக வீடமைப்புக்கு பொறுப்பாக இருந்த முன்னாள் அமைச்சரையோ யாரையோ யாரும் விமர்சனம் செய்யக் கூடாது என்றும் அறிவுறுத்தியுள்ளார். அமரர் ஆறுமுகன் தொண்டமானால் உருவாக்கப்பட்ட இந்திய வீடமைப்புத் திட்டம் உரிய முறையில் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதே ஜீவன் தொண்டமானின் நோக்கமாகும் என்றார்.

# ஒத்திவைக்கப்பட்ட HNDE தேர்வை 30 ஆம் திகதி நடத்த ஆளுநர் அறிவுறுத்தல்

**(இஃஜாஸ் ஏ பரீட்)**

முன்னதாக கேள்வித்தால்கள் கசிந்த குற்றச்சாட்டில் இடைநீக்கம் செய்யப்பட்ட உயர் தேசிய டிப்ளோமா ஆட்சேர்ப்புக்கான போட்டித் தேர்வுக்கு (30.10.2021) திகதி போட்டித் தேர்வை நடத்துமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மாகாண பொதுச் சேவை ஆணையத்திற்கு அறிவுறுத்தியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் காலியாக உள்ள ஆங்கில ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதன் அடிப்படையில் தொடர்புடைய தேர்வு நடைபெற்றது.

வினாத்தாள் முன்கூட்டியே கசிந்ததாக தேர்வெழுதிய மாணவர்கள் கூறிய குற்றச்சாட்டுகள் குறித்து உடனடியாக விசாரணை நடத்த ஆளுநர் சிஐடிக்கு உத்தரவிட்டார். அந்த விசாரணையின் முடிவு, சம்பந்தப்பட்ட தேர்வை மீண்டும் நடத்த வேண்டும்.

அதன்படி, சம்பந்தப்பட்ட தேர்வு வரும் 30ம் தேதி மீண்டும் நடைபெறும்.

எந்தவொரு பரீட்சார்த்திகளும் அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் 27.10.2021 கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு 0262220092 இல் தகவல் தெரிவித்து தகவல்களைப் பெறலாம்




நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com

# கந்தளாய் பிரதேசத்தில் 2500 ஏக்கர் திடல் காணிகளில் வேளாண்மை செய்கைகள் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மும்முரம்

**(எப்.முபாரக்)**

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேசத்தில் 2500 ஏக்கர் திடல் காணிகளில் வேளாண்மை செய்கைகள் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

மாரி மழை நீரினை நம்பி மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வேளாண்மை செய்கை தற்போது விவசாயிகள் உழுதல், வரம்பு கட்டுதல், பபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

கந்தளாய் பிரதேசத்தில் பேராறு, அணைக்கட்டு, பேராற்றுவெளி, வட்டுக்கச்சி, மத்ரஸாநகர், ரஜஎல, வான்எல, சூரியபுர மற்றும் ஜயந்திபுர போன்ற பகுதிகளிலே வேளாண்மை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது திருகோணமலை மாவட்டத்தில் மாரி மழை பெய்து வரும் நிலையிலே திடல் காணிகளில் விவசாய நடவடிக்கைகளையும் விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்


SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59




# கந்தளாய் புகையிரத கடவை விபத்தில் பொலிஸ் அதிகாரியொருவர் மரணம்:சாரதி படுகாயம்

(எப்.முபாரக்)

திருகோணமலை கந்தளாய் புகையிரத கடவையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பயணித்த கார் ஒன்று மோதி விபத்துக் குள்ளானதில் பொலிஸ் அதிகாரியொருவர் மரணம் காரின் சாரதி படுகாயங்களுடன் கந்தளாய் வைத்தியசாலையில்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் காரொன்று விபத்துக்குள்ளானதில் பொலிஸ் அதிகாரியொருவர் ஸ்தலத்திலே மரமாகியுள்ளதோடு, காரின் சாரதியும் பொலிஸ் உத்தியோகத்தருமான மற்றொருவர் படுகாயங்களுடன் கந்தளாய் வைத்தியசாலையில் அதிதீவிர கிசிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்விபத்துச் சம்பவத்தில் மாத்தளை பகுதியைச் சேர்ந்த டி.எல் சிறிசேன 55 வயதுடைய பொலிஸ் உதௌதியோகத்தரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலையிலிருந்து கந்தளாயிக்குச் சென்ற கார் புகையிரத கடவையை கடக்க முற்பட்ட போத இவ்வாறு விபத்துக்குள்ளான தாகவும் சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை தூக்கத்தினாலே இவ்விபத்து நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள்.

# சுத்தமான குடிநீரின்றி அல்லலுறும இருதயபுர கிராமமக்கள்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)



திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இருதயபுரம் பச்சைநூர் பகுதியில் வசித்து வரும் மக்களுக்கான சுத்தமான குடி நீர் இன்றி வாழ்ந்து வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

ஆரம்ப காலம் தொட்டு மஞ்சல் நிற கிணற்று நீரை பருகியே பல தரப்பட்ட வயிற்று சம்மந்தமான நோய்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். இக் கிராமத்தில் சுமார் 35 க்கும் அதிகமான குடும்பங்கள் நாளாந்த கூலித் தொழிலை நம்பி வாழ்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

குடி நீரினை பெறுவதாக இருந்தால் அயல் கிராமமான மணல் சேனை கிராமத்துக்கு ஒன்றரை கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். இவ்வாறாக நீரை பெறுவதாக இருந்தால் குறித்த அயல் கிராம கோயில் உண்டியலில் விரும்பிய தொகை பணத்தை போட்டு விட்டே நீரை பெற்று துவிச்சக்கர வண்டி மூலமாகவும் முச்சக்கர வண்டி ஊடாக பெறுவதாக இருந்தால் 200 ரூபா வரை கொடுத்தே குடி நீரை பருக வேண்டி உள்ளது.

பாடசாலை பிள்ளைகளின் ஆடைகள் உட்பட பல தேவைகளுக்காக இம் மஞ்சல் நிற கிணற்று நீரையே பாவிக்க வேண்டியுள்ளது.பல முறை உரிய அதிகாரிகளிடத்தில் குடி நீருக்கான கோரிக்கைகளை முன்வைத்த போதும் இற்றை வரைக்கும் தீர்வு எட்டப்படவில்லை. தொடராக ஏமாற்றமடைந்தது மாத்திரமே மிச்சம் சுத்தமான குடி நீர் இன்மையால் வயிற்றில் கல்,வாந்தி பேதி சிறு நீரக நோய் போன்றனவும் ஏற்பட்டுள்ளது. எனவே தங்கள் கிராம மக்களுக்கு சுத்தமான குடி நீரினை பெற்றுத் தருமாறு அப் பிரதேச மக்கள் உரியவர்களிடத்தில் கோரிக்கை விடுக்கின்றனர்.

# விளையாட்டுத்துறை அமைச்சரின் உதவியோடு அம்பாரை விளையாட்டு மைதானங்கள் புனரமைக்கப்படும்

(வி.சுகிர்தகுமார்)



இளைஞர்களும் விளையாட்டுக்கழகங்களும் அரசாங்கத்துடனும் விளையாட்டுத்துறை அமைச்சுடனும் இணைந்து செயலாற்றும்போது மாத்திரமே எமது பிரதேச விளையாட்டுக்கழகங்களின் தேவையினை பூர்த்தி செய்ய முடியும் என நீர் வழங்கல் அமைச்சின் ஆலையடி வேம்பு பிரதேச இணைப்பாளர் பியசேன கிருத்திகனால் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு இணைந்து செயற்படுகையில் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்சவின் உதவியோடு அம்பாரை மாவட்டத்தில் உள்ள விளையாட்டு மைதானங்கள் புனரமைக்கப்படுவதுடன்; பிரதேச விளையாட்டு கழகங்களின் தேவைகளும் பூர்த்தி செய்யப்படும் அவரால்; உறுதிமொழி வழங்கப்பட்டது.

கல்முனை தமிழ் பிரிவு பாண்டிருப்பு விளையாட்டுக்கழக உறுப்பினர்களுக்கும் நீர்வழங்கல் அமைச்சின் ஆலையடிவேம்பு பிரதேச இணைப்பாளர் பியசேன கிருத்திகனுக்கும் இடையிலான சந்திப்பொன்று அக்கரைப்பற்று பொதுஜன பெரமுன அலுவலகத்தில் இன்று நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது கருத்து தெரிவித்த விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் கல்முனை தமிழ் பிரிவில் 10க்கும் மேற்பட்ட விளையாட்டுக்கழகம் இருந்த பொழுதும் நிறைவான பொருத்தமான விளையாட்டு திடல் ஒன்று இல்லாதது பெருத்த குறையாக காணப்படுவதுடன் இளைஞர்களின் திறமைகளை வெளிக்காட்டுவதற்கு தடையாக இந்த குறை இருப்பது இப்போது வாழும் இளைஞர்களுக்கு மிகுந்த மனவேதனையை தருகிறது. கடந்த காலத்தில் எம்மை தவறாக வழி நடத்திய உள்ளூர் தலமைகளின் கவலையீனங்களினால் சரியான அரசியல் தலமையை பின் தொடர்ந்து எங்கள் தேவையை நிறைவாக பெற முடியாமல் போனது துரதிஷ்டமே ஆகும். வருங்காலத்தில் இவ்வாறான தவறுகள் நடைபெறாது அரசுடன் பயணித்து விளையாட்டு மைதானம் மட்டுமல்லாது எங்கள் பகுதியில் காணப்படும் அனைத்து அபிவிருத்தி அவலங்களையும் சீர்படுத்தி செம்மையான அரசியல் பயணம்செய்ய நாங்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளோம் என்றனர்.

இதற்கு பதிலளித்த கிருத்திகன் நிட்யமாக கழகத்தின் தேவைப்பாடுகள் தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு முடிந்தவரையிலான தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப் படும் என்றார்.

இச்சந்திப்பில் கழக உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# அருவி பெண்கள் வலையமைப்பினால் பாடசாலைகள் துப்பரவுப் பணியுடன், சுகாதாரப் பாதுகாப்புப் பொருட்கள் வழங்கி வைப்பு





எதிர்வரும் வராங்களில் ஆரம்ப பாடசாலைகள் கற்றல் நடவடிக்கைகளுக்காக திறக்கப்படவுள்ள நிலையில் மாணவர்களின் சுகாதாரம் மற்றும் நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் வகையில் மட்டக்களப்பு கொம்மாதுறை விநாயகர் வித்தியாலத்தில் இன்றைய தினம் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன .

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமூக அபிவிருத்தி, சுகாதாரம் மற்றும் கல்வி மேம்பாட்டு பணிகளை முன்னெடுத்து வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமான மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பினால் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையிலும் சமூகத்தின் நலன் கருதி இச் சிரமதாணப் பணிகள் முன்னெடுக்கப் பட்டது.

அருவி பெண்கள்வலையமைப்பின் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான மயூரி ஜனனுடன் அருவி பெண்கள் வலையமைப்பின் உத்தியோகத்தர்கள், வலையமைப்பின் பெண்கள் சிறுகுழு உறுப்பினர்கள், 2ம் கட்ட தலைமுறையினர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அத்துடன், மட்டக்களப்பு வாகனேரி கோகுலம் வித்தியாலய மாணவர்களின் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பாடசாலை வளாகம் மற்றும் வகுப்பறைகளை துப்பரவு செய்யும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டது, அத்துடன் விசேட தேவைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான சுகாதார பாதுகாப்பு பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் கல்குடா வலையக்கல்வி பணிமனையின் முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கனகசுந்தரம் ஜெயவதனன் அவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆனந்தகிரி அறப்பணி சபையின் ஏற்பாட்டில் வசதி குறைந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு





(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்ட ஆனந்தகிரி அறப்பணி சபையின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு ஏறாவூர்பற்று (செங்கலடி) பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கித்துள் - ராஜபுரம் கிராமத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட ஒரு தொகுதி வசதிகுறைந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் ராஜபுரம் கிராம அபிவிருத்தி சங்ககட்டிட முன்றலில் ஆனந்தகிரி அறப்பணி சபையின் தலைவர் திரு.லோ. தீபாகரன் தலைமையில் நடைபெற்றது.

ஆனந்தகிரி அறப்பணிசபையின் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஆனந்தகிரி அறப்பணி சபையின் ஆலோசகரும், ஓய்வுபெற்ற பிரதி திட்டமிடல் பணிப்பாளருமான ச.சிவலிங்கம், செயலாளர். நே.பிருந்தாபன், உபதலைவர் இ.மதிராஜ், இணைப்பாளர்களான க.செந்தூரன், திரு.நே.ஜனார்த்தனன், ம.புவிதரன் மற்றும் ராஜபுரம் கிராம அபிவிருத்தி சங்கத்தினர், மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர், மாணவர்கள், நலன்விரும்பிகள் எனபலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்விற்கான அனுசரணையினை மட்டக்களப்பு - குருக்கள்மடத்தை சேர்ந்த அமரத்துவம் அடைந்த திருமதி. மகேஸ்வரி அருளானந்தம் அவர்களின் ஞாபகார்த்தமாக அன்னாரின் குடும்பத்தினர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு ஆனந்தகிரி அறப்பணி சபையானது மட்டக்களப்பு மாவட்டம் முழுவதுமாக தனது பணியினை விரிவுபடுத்தி கல்வி அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி, தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள், வறுமை ஒழிப்பு, இயற்கையை நேசித்தல், கலை கலாசார நிகழ்வுகளை நடாத்துதல் முதலான செய்றிட்டங்களை மாதம் ஒரு செயற்றிட்டம் எனும் அடிப்படையில் முன்னெடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# திருகோணமலை – கண்டி பிரதான வீதி விபத்தில் இருவர் காயங்களுடன் பொது வைத்தியசாலையில் அனுமதி

திருகோணமலை சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை கண்டி பிரதான வீதியில் ஏற்பட்ட விபத்தில் இருவர் காயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

நேற்று அதிகாலை 4 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது

பெலவத்தை பகுதியிலிருந்து திருவண்ணாமலை இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்திற்கு எரிபொருள் நிரப்புவதற்காக வந்த எரிபொருள் பௌசர் வானம் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது

இவ்வாறு விபத்துக்குள்ளான பவுசர் வாகனத்தில் சாரதி உட்பட மேலும் இருவர் பயணித்துள்ளதாகவும் சாரதிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் சாரதியுடன் வருகை தந்த இருவரும் காயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

மேலும் இவ்விபத்து தொடர்பில் தெரியவருவதாவது நேற்று இரவு பெலவத்தை பிரதேசத்திலிருந்து வருகை தந்ததாகவும் இன்று அதிகாலை நான்கு மணியளவில் சாரதிக்கு நித்திரை ஏற்பட்டமையினால் இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிவந்துள்ளதாக சீன குடா பொலிசார் தெரிவித்தனர்.

# இலங்கை வாழ் மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்

## அவுஸ்திரேலியாவில் கல்வித் தகைமையுடன் கூடிய பகுதி நேர வேலைவாய்ப்பு!!



UNSW Global

**Are you after O/Levels?**

Start your Journey to a World TOP 50 University in Australia from Sri Lanka

Apply now
**UNSW FOUNDATION STUDIES**

Contact us to start your journey
Lavanya:
077 489 8773
lavanya.k@aibt.education

AIBT CAMPUS

**சாதாரண தரத்தில் (O/L) சித்தி அடைந்த 24 வயதுக்கு உட்பட்டவர்கள் மற்றும் 25 - 35 வயதிற்கு உட்பட்ட (Mature Students) பொருத்தமான ஆரம்பக் கட்ட கல்வித்தகமை உடையவர்களுக்கு, இதோ உலகின் 44 ஆவது இடத்தில் உயரிய கல்வித்தரத்தில் திகழும் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகமான** The University of New South Wales Global, Sydney, Australia (https://www.unswglobal.unsw.edu.au/) **தனது** Foundation studies **கற்கையை எம் மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் அவுஸ்திரேலியா நாட்டில் பொருத்தமான பகுதிநேர வேலை வாய்ப்புடன் மேற்படிப்பையும் தொடரக் கூடிய அருமையான வாய்ப்பையும் வழங்குகிறது . இப்பாட நெறியினை கொழும்பு மற்றும் கண்டியில் அமைந்துள்ள** AIBT(Asian Institute of Business and Technologyd https://aibt.education/ ) **கல்விக் கூடத்தில் மாத்திரமே கற்பிக்க அவுஸ்திரேலிய பல்கலைக்கழகமானது கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு அனுமதி கொடுத்துள்ளது.**

**அக்டோபர் 5ஆம் திகதி**
பாடகக் கற்கை ஆரம்பிக்கப்படவுள்ளது

# "GRAB YOUR OPPORTUNITY"

**Are you exploring opportunities for world class education with an Australian University?**

**The UNSW Global (https://www.unswglobal.unsw.edu.au/) offers an exciting opportunity for you through AIBT Campus (Asian Institute of Business and Technology- https://aibt.education/ ) in Colombo and Kandy providing students a dedicated pathway to achieve their university dreams in Australia to study at University of New South Wales ,Sydney, a top rank work class university .**

**AIBT will deliver the UNSW Global Foundation Studies Program to students at its campuses in Colombo and Kandy.**

**For more information, please Call Ms. Lavanya on 077 4898 773 for the course commencing Oct 5th ,2021**

## சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்!!! விண்ணப்பிக்க முந்துங்கள்!!

**மேலதிக விபரங்களை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பெற்றுக் கொள்ள அழைக்கவும் Ms.Lavanya - 077 4898 773**

Child Friendly Cities Initiative

# Batticaloa Kids Got Talent

# CONTEST

## For Children's Day 2021

வயதெல்லை: 5-15

உங்கள் ஆக்கங்களை எங்களுடன் புகைப்படமாகவோ அல்லது வீடியோ பதிவாகவோ பகிர்ந்து கொள்ளுங்கள்:

- வரைதல் (புகைப்படத்தை அனுப்பவும்)
- நடன வீடியோ
- பேச்சு வீடியோ
- வீட்டுத் தோட்ட வீடியோ சுற்றுப்பயணம்
- கைவேலைப்பொருட்கள் -உங்கள் சொந்த படைப்புகள் வீடியோவாக
- கதை சொல்லும் வீடியோ
- பாடல் பாடிய வீடியோ

கீழே உள்ள தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை உங்கள் ஆக்கங்களுக்காக தெரிவு செய்யவும்.
1.கோவிட் 19 தொற்றுநோய் உங்கள் வாழ்க்கை, கல்வி மற்றும் கனவுகளை எவ்வாறு பாதித்தது?
2. உங்கள் நகரை சிறுவர் சிநேகமாக எவ்வாறு பார்க்க விரும்புகிறீர்கள்?

உங்கள் படைப்புகளை பின்வரும் வாட்ஸ்அப் அல்லது மின்னஞ்சலில் 15.10.2021 க்கு முன்னர் சமர்ப்பிக்கவும்

+94768183878

Tharniya.Thavendraan@CERIkids.org

ceri SRI LANKA

unicef for every child


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


Restaurant
GRÜNAU
ITALY INDIAN THAI SRILANKA
Meier-Wiesen Str. 58
8064 Zürich
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
VISA
TWINT

# கேதார கௌரி விரதமும் அதுபற்றிய விபரமும்..!

(அ . அச்சுதன்)

அனைத்து மதத்திலும் மதஞ்சார்ந்த விரதங்களை அவற்றை பின்பற்றுபவர்கள் கடைப்பிடித்து வருகிறார்கள் இந்து மதத்தில் மட்டும் பலதரப்பட்ட விரதங்கள் அவ்வவ் விரத விதிகளின்படி இந்து மக்களால் அனுஸ்டிக்கப்பட்டு வருகிறது. விரதங்கள் ஒவ்வொன்றுக்கும் வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளது . அவற்றை சங்கற்ப பூர்வமாக கைக்கொள்வதிலேயே தான் விரத பலன்கள் உத்தமம், மத்திமம், அதயம் என அமைகின்றது.

புரட்டாதி மாதமென்றாலே புரட்டாதிச்சனி விரத்தை தொடர்ந்து நவராத்திரி, கேதார கௌரி விரதமெனவரும்.

21 நாட்கள் கொண்ட கேதார கௌரி விரதம் அத்தல கேதார கௌரி சிவனை வேண்டிதான் அர்த்த நாதீஸ்வரியாக கேதாரநாதரை எப்போதும் பிரியாதிருக்கும் பேறு வேண்டி நோற்றதினால் கேதார கௌரி விரதம் என நாமம் பெறலாயிற்று.

சிவ விரதங்களுள் அதிக சக்தி வாய்ந்ததும் சகல சௌபாக்கியங்களையும் தரவல்லதும் அதிக நாட்கள் கொண்டதாகவும் கொண்ட விரதம் கேதாரத்து நாயகி கௌரியம்பாள் அனுஸ்டித்து அர்த்த நாதீஸ்வரியாகப் பேறுபெற்றதும் புராணகதை மூலம் அறிந்ததே.



மேற்படி விரதாரம்பம் 15.10.2021 வெள்ளிக்கிழமை விஜயதசமியில் ஆரம்பமாகி 04.11.2021 வியாழக்கிழமை கிருஸ்ணபட்ச அமாவாசை தீபாவளிப்பண்டிகை அன்று திருக்காப்புக் கட்டுதலுடன் நிறைவடைகிறது. இவ்வருடம் சரியாக 21 தினங்கள் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இப்பதிவுகளை நமது வாக்கியம், கணிதம் ஆகிய இரு பஞ்சாங்கங்களும் செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் திருநாட்டில் தமிழர்கள் எங்கெங்கு வாழ்ந்தாலும் அங்கெல்லாமுள்ள இந்துக்கள் அனேகமானோர் இந்த கேதார கௌரி விரதத்தினையே கடைப்பிடித்து வருவதைக்காணமுடியும். கணவன் மனைவி நல்லுறவுக்கும், நீண்ட ஆயுள், நிலையான கல்வி செல்வமாற்றலுக்கம் இவ்விரத அனுஸ்டான மூலம் பலன்களை பெறமுடியுமெனவும் அறிய முடிகிறது.

21 நாள் கொண்ட இந்த விரதத்தில் 21இழையினால் ஆன சிகப்புப்பட்டு நூலாள் திரிக்கப்பட்டு 21 முடிப்புக்களிட்டு சிவகும்பம் அல்லது சிவலிங்கத்தில் இத்திருக்காப்புப் போட்டு பூசை செய்யப்பட்டு 21 வகையான நிவேதனப் பொருட்களுடன் வெற்றிலை பாக்கு பழம் தேங்காய் உடைத்து படைத்து எதிர்வரும் 04.11.2021 வியாழக்கிழமை தீபாவளி அவாவாசையன்று உபவாசமிருந்து இத்திருக்காப்பை அணிந்து பிரதமையில் பாரணை பண்ணி விரதத்தை நிறைவு செய்து கொள்வர்.

விரதம் நோற்பவர்கள் குறிப்பிடத்தக்க கால அளவு விரதம் கடைப்பிடித்து உத்யாபனம் செய்து விரதத்தை நிறைவு செய்வதுதான் சிறப்பு. அதன் பின்பு தான் விரத பலன்கள் தாங்கள் கடைப்பிடித்த பக்குவ நிலைக்கேற்ப உத்தமம், மத்திமம், அதமம் என்ற மூன்று வகையான பிரிவுகளில் பலன்கள் அமையக்கூடும்.

உத்யாபனம் செய்து விரதத்தை எவ்விரதமாயினும் நிறைவு செய்தவர்கள் விரும்பினால் தத்தமது சக்திகளுக்கேற்ப மீண்டும் தாம் அனுஸ்டித்த விரதங்களை தொடரமுடியும். விரதம் எதுவாயினும் அதனை விரதமாக அனுஸ்டித்தலே புனிதம் பெறும்.

# பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதும் விசேட போக்குவரத்து விசேட கழிவுடன் பருவகால சீட்டும் வழங்கப்படும்

வாஸ் கூஞ்ஞ

எதிர்வரும் 21 ந் திகதி ஆரம்பமாக இருக்கும் பாடசாலையை முன்னிட்டு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலன்கருதி விஷேட போக்குவரத்து சேவைகள் நடைபெற ஏற்பாடுகளுடன் மன்னார் தனியார் போக்குவரத்து சேவையினர் முப்பது வீத கழிவுடன் போக்குவரத்து பருவகால பயணச் சீட்டு வழங்குவதாக இது தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ந் திகதி ஆரம்பமாக இருக்கும் பாடசாலை தொடர்பாக மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் செவ்வாய் கிழமை கூட்டம் இடம்பெற்றது

இதைத் தொடர்ந்து மன்னார் அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்

இவ் கூட்டத்தில் மன்னார் மாவட்டத்தின் மன்னார் கல்வி வலயம் மற்றும் மடு கல்வி வலயம் ஆகிய இரு கல்வி வலய பணிப்பாளர்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

இதன் அடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் மடு கல்வி வலயத்தில் 44 பாடசாலைகள் 2588 மாணவர்கள் கொண்டதாகவும்

மன்னார் கல்வி வலயத்தில் 46 பாடசாலைகள் 3%84 மாணவர்கள் கொண்டதாகவும் இவ் பாடசாலைகள் ஆரம்பமாக இருக்கின்றன.

இவ் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் போது பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள்பற்றியும்; ஆராயப்பட்டது. அப்பொழுது இது தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் இவ் கூட்டத்தில் சுகாதார தொடர்பான விளக்கம் அளித்தார்.

அத்துடன் மாணவர்கள் தங்கள் பாடசாலைகளுக்கு செல்லுவதற்கான போக்குவரத்து தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இது தொடர்பாக இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் போக்குவரத்து சங்கத்தினருடனும் கலந்துரையாடியுள்ளோம்.

இதன் அடிப்படையில் யாழ்ப்பாணத்திலிருந்தும் மன்னாரிலிருந்தும் மற்றும் வவுனியாவிலிருந்தும் ஆசிரியர்களுக்காக விஷேட போக்குவரத்து சேவைகளை ஒழுங்கு செய்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.



இங்கு தனியார் போக்குவரத்து சங்க பிரதிநிதி கருத்து தெரிவிக்கையில் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களிலிருந்து தினமும் பயணம் செய்யும் ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கான பருவகாலச் சீட்டு முப்பது வீதம் கழிவில் தாங்கள் வழங்கப்பட இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இதனால் ஆசிரியர் மற்றும் மாணவர்கள் இதன் மூலம் பயன் அடையக்கூடியதாக இருக்கும். அத்துடன் இரு பகுதினரையும் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் நலன் கருதி முறையான உள்ளூர் சேவைகளையும் நடாத்தும்படியும் வேண்டியுள்ளோம்.

எமக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள முகக்கவசங்கள் மன்னார் வலயத்துக்கு 8000 முகக் கவசங்களும், மடு வலயத்தக்கு 4000 முகக் கவசங்களும் மாணவர்களுக்காக நேற்று (12) செவ்வாய் கிழமை இரு கல்வி வலய பணிப்பாளர்களிடம் கையளித்துள்ளோம்.

எதிர்வரும் 21 ந் திகதி இவ்விரு கல்வி வலயங்களுக்கு உட்பட்ட முன்பள்ளி பாடசாலைகளும் அத்தோடு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்களத்துக்கு கீழ் இயங்குகின்ற முன்பள்ளி பாடசாலைகளையும் இவ் தினத்தில் மீண்டும் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் இவ்வாறு தெரிவித்தார்.

நாள் தோறும் செய்திகளை வீடியோ வடிவில் பார்க்க
Supeedsamtv.com




supeedsam epaper, supeedsam videos, supeedsam news
www.supeedsam.com

# மீலாதுன் நபி விழாவை முன்னிட்டு பள்ளிவாசல்களுக்கு கடிதம் அனுப்பிய முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

(நூருல் ஹுதா உமர்)

முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிறந்த தின மீலாதுன் நபி விழாவினை ஒட்டி எதிர்வரும் 18,19,20 ஆகிய தினங்களுக்கு அல்லது மீலாதுன் நபி தினத்தன்று மட்டுமாவது பள்ளிவாசல்களை மின் குமிழ்களினால் அலங்கரிக்குமாறு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் எம் எல் எம் அமீர் அலி சகல பள்ளிவாசல்களின் நம்பிக்கை பொறுப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அந்த தினத்தை சிறப்பிக்குமுகமாக சுகாதார வழிமுறைகளை பின்பற்றி நரநடுகையில் ஈடுபடுமாறும், மீலாதுன் நபி விழா தொடர்பிலான பதாதைகளை காட்சிப்படுத்துமாறும் அந்த கடிதத்தின் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# கிழக்கு மாகாண ஆளுனரால் சேதனப் பசளை தயாரித்து விவசாயிகளுக்கு வழங்கும் நிகழ்வு

(இஃஜாஸ் ஏ பரீட்)

கமநல சேவை நிலையங்கள் ஊடாக சேதனப் பசளைகள் தயாரித்து விவசாயிகளுக்கு வழங்கும் வேலைத்திட்டம் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இதற்காக கிழக்கு மாகாணசபை நிதியில் இருந்து சுமார் ஐந்து (05) இலட்சம் ரூபாய் பெறுமதியான இயந்திரம் ஒன்று கமநல சேவை நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இக் கமநல சேவை நிலையங்களில் சேதனப் பசளை தயாரிக்கும் விதத்தை பார்வையிடவும் அங்கு உள்ள அதிகாரிகளை மற்றும் விவசாய சங்கங்களை அறிவுறுத்தும் நிகழ்வொன்று கிண்ணியா கமநல சேவை நிலையத்தில் நடைபெற்றன.

இந்நிகழ்வு கிண்ணியா கமநல சேவை நிலைய முன்றலில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கலந்து கொண்டு பசளை செய்யும் முறையை பார்வையிட்டதுடன் விவசாயிகளுக்கும் விவசாய சம்மேள



னம் உறுப்பினர்களுக்கும் மற்றும் கமநல சேவை உத்தியோகத்தர்களுக்கும் அறிவுறுத்தல்களையும் வழங்கியதுடன் சேதனப் பசளை தயாரிப்பது தொடர்பான அறிவுறுத்தல் அடங்கிய புத்தகங்களையும் கையளித்தார்.

# உதவி பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு

(ஐ.ஏ.ஸிறாஜ்)



பாலமுனை றைஸ்டார் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் உதவி பொலீஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு பாலமுனை மண்ணுக்கு பெருமை சேர்த்த பாலமுனை றைஸ்டார் விளையாட்டு கழகத்தின் அலோசகர் எம்.கே.எம்.இப்னு அசாறை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாலமுனையில் இடம்பெற்றது.

றைஸ்டார் விளையாட்டு கழகத்தின் தலைவர் ஐ.எல்.எம்.பாயிஸ் அசிரியர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கழகத்தின் ஆலோசகர்களான கே.எல்.உபைதுள்ளா அதிபர், கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.இப்றாஹிம், அக்கரைப்பற்று மாநகர சபையின் கணக்காளர் எம்.எப்.பர்ஹான், தொழிலதிபர் கே.எல்.எம்.ஜிப்ரி உட்பட கழகத்தின் உறுப்பினர்கள் , பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது உதவி பொலீஸ் அத்தியட்சகராக பதிவி உயர்வு பெற்ற எம்.கே.எம்.இப்னு அசாறை பாராட்டி கழகத்தின் உறுப்பினர்கள் புடை சூழ வாழ்த்தி பொன்னாடை போரத்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நிலாவெளி புறா தீவு தேசிய பூங்கா கடற்கரை தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டம் பொதுமக்களினால் முன்னெடுப்பு

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை நிலாவெளி புறாத்தீவு தேசிய பூங்கா மற்றும் அதனை அண்டியுள்ள கடற்கரைப் பிரதேசங்களை தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இவ் வேலைத்திட்டத்தினை புறாத்தீவு தேசிய பூங்காவின் அறங்காவலர் உபாலி குமாரதுங்க அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அசாதாரண சூழ்நிலை காரணமாக சுற்றுலா பயணிகள் வருகை குறைந்து காணப்படுவதனால் இப்பகுதி கடல் மற்றும் கடலோர நிலப்பரப்புகள் குப்பைக் கூளங்கள் நிறைந்து காணப்பட்டதை அடுத்து இவ் வேலைத்திட்ட முன்னெடுக்கப்பட்டது

இவ் சுத்தப்படுத்தும் திட்டத்தினால் கடல் வளம்,கடல் வாழ் உயிரினங்கள் மற்றும் கண்டல் தாவரங்கள் என்பன பாதுகாக்க படுவதுடன் நாடு வழமைக்கு திரும்பியுள்ள நிலையில் சுற்றுலா துறையினை மேலும் முன்னெடுக்க முடியுமென எதிர்பக்கப்படுகின்றது

இந்நிகழ்வில் புறாத்தீவு தேசிய பூங்காவின் அறங்காவலர் உபாலி குமாரதுங்க,அலுவலக உத்தியோகத்தர்கள்,அரச



நிறுவன உறுப்பினர்கள் மற்றும் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து இவ்வேளை திட்டத்தினை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருக்கோவில் பிரதேசத்தில் இயற்கை விவசாயத்தை மேம்படுத்த விவசாயிகளுக்கு விதை நெல் வழங்கி வைப்பு



(திருக்கோவில் நிருபர்)

திருக்கோவில் பிரதேசத்தில் இயற்கை விவசாயத்தை மேம்படுத்த விவசாயிகளுக்கு விதை நெல் வழங்கி வைப்பு.

அம்பாரை திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுவில் தெரிவு செய்யப்பட்ட 35 விவசாயிகளுக்கு இயற்கை முறையிலான விவசாயத்தை மேம்படுத்தும் நோக்குடன் பாரம்பரிய விதை நெல் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு அம்பாரை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் திருமதி பி.கலைவாணியின் தலைமையில் திருக்கோவில் 04 பல்தேவைக் கட்டடத்தில் இன்று இடம்பெற்று இருந்தன.

அரசாங்கத்தின் திட்டத்தை வலுப்படுத்தும் வகையில் திருக்கோவில் பிரதேசத்தில் நஞ்சற்ற விவசாய நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தும் நோக்குடன் அம்பாரை மாவட்ட பெண்கள் வலையமைப்பு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

அந்தவகையில் இயற்கை விவசாயத்தினை விரிவுபடுத்தும் வகையில் திருக்கோவில் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 35 விவசாயிகளுக்கு பாரம்பரிய நெல் இனங்களான சுகந்த மற்றும் கழிவுநெட்டி எனப்படும் நெல் இனங்கள் ஒரு ஏக்கருக்கு 60 கிலோ வழங்கப்பட்டு இருந்ததுடன் உழவுக கூலியாக ஒரு ஏக்கருக்கு 5ஆயிரம் ரூபா பணவும் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் தம்பிலுவில் விவசாய விரிவாக்கல் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.யோகநாதன் விவசாய தொழிநுட்ப உத்தியோகத்தர் எஸ்.சயரூபன் கிராம உத்தியோகத்தர் கே.வாசு அம்பாரை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் திருமதி பி.கலைவாணி பிரதேச இணைப்பாளர் திருமதி எஸ்.விஜிதா ஆகியோரும் கலந்து கொண்டு விதை நெல் மற்றும் நிலக்கடலை அகியவற்றை வழங்கி வைத்திருந்தனர்.

# காலனிலை மாற்றத்தின் விளைவாக பல்வேறு இயற்கை அனர்த்தங்களை உலகம் எதிர்நோக்கி வருகின்றன

( மருதமுனை நிருபர்)



சர்வதேச அனர்த்த அபாய குறைப்பு தினம் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 13ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது.

மேற்படி விடயம் தொடர்பாக, காலனிலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் விளைவாக பல்வேறு வகையான இயற்கை அனர்த்தங்களை உலக நாடுகள் எதிர்நோக்கி வருகின்றன. இதன் காரணமாக மனித உயிர்கள், உட்கட்டுமானங்கள், பொருளாதாரம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் என்பனவற்றில் பாரிய அழிவை ஏற்படுத்தியதன் விளைவாக உலக நாடுகள் பொருளாதார பின்னடைவை சந்தித்துள்ளதுடன் ஆசியா மற்றும் பசுபிக் நாடுகள் மிகவும் மிக மோசமாகக் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதற்கு இலங்கையானது விதிவிலக்கல்ல என அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

உலகலாவிய காலநிலை இடர் குறியீடு 2019 இன் படி இயற்கை அனர்த்த நிகழ்வுகளின் படி இலங்கையானது 2ஆம் இடத்துக்கு உள்வாங்கப்பட்டுள்ளது. இதற்கு பிரதான காரணம் நாட்டில் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகளில் அனர்த்த அபாய குறைப்பு சுற்றுச்சூழல் முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்ற நழுவல் போக்கு போன்ற விடயங்களில் ஒன்றாகவும், முறையாகவும் செயற்படாமையின் காரணமாக அனர்த்த ஆபத்து வலுவடைந்ததின் விளைவாக அனர்தங்கள் ஏற்படுவதுடன் இழப்புக்களையும் சந்திக்க வேண்டியுள்ளது.

அனர்த்ததிற்கு முன்னர் செயற்படுத்த வேண்டிய அனர்த்த குறைப்பு, தணிப்பு, அனர்த்த தயார்படுத்தல் மற்றும் முன்னெச்சரிக்கை பொறிமுறைகளை வலுப்படுத்துதல் போன்ற விடயங்களில் கூடிய கவனம் செலுத்தப்படுதல் அவசியமாகும். ஆனால்

இவை தொடர்பில் திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் முழுமையான கவனம் செலுத்த தவறியதன் விளைவாக அதிக இழப்புக்களை சந்திக்க நேரிடுகின்றது.

அனர்த்த அபாய குறைப்பு முகாமைத்துவம் தொடர்பான செயற்பாடுகளை எமது அம்பாறை மாவட்டதில் வினைத்திறனுடன் கொண்டு செல்வதற்காக சுமார் 100க்கு மேற்பட்ட பயிற்றுவிப்பாளர்கள் சகல பிரதேச செயலகங்கள், சுகாதாரத்துறையினர் மற்றும் ஏனைய துறைசார் திணைக்களங்களிலும் உள்ளனர்.

கடந்த 2019ம் ஆண்டு அதற்கான முழு முயற்சிகள் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அது மாத்திரமல்லாமல் அரச உத்தியோகஸ்தர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது . இவ்வாறன நிலையிலும் அனர்த்த அபாய குறைப்பு முகாமைத்துவ செயற்பாடுகளை கொண்டு செல்வதற்கான ஆர்வமானது சகல மட்டத்திலும் குறைவாக உள்ளமை அவதானிக்க முடிகின்றது. நாளை (13) அனுஷ்டிக்கப்படும் அனர்த்த அபாய குறைப்பு தினமானது ஐ.நா.சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டது எனவும் தெரிவித்தார்.

# காட்டு யானைகள் அட்டகாசத்தினால் குடியிருப்பு மனைகள் பயன்தரும் மரங்கள் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகளுக்கு பாதிப்பு

(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களில் காட்டு யானைகள் உட்புகுந்து பல்வேறான சேதங்களை உண்டு பண்ணி வருவதனால் தாம் மிகந்த அச்ச நிலையில் உள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதிகாலை ஆறு மணியளவில் அக்கரைப்பற்று சிறிய முல்லைத்தீவு மற்றும் அட்டாளைச்சேனை சம்புநகர் ஆகிய பிரதேசங்களுக்குள் உட்புகுந்த காட்டு யானைகள் சில அப்பிரதேசங்களில் இருந்த பயன்தரும் முப்பதிற்கு மேற்பட்ட தென்மை மரங்கள் மற்றும் மாமரங்கள் போன்றவற்றை துவம்சம் செய்துள்ளதுன.

இதுதவிர,மக்கள் குடியிருப்பு மனைகள் சிலவற்றுக்கு சேதத்தினை ஏற்படுத்தியுள்ளதுடன், வர்த்தக நிலையம் ஒன்றையும் பாரியளவில் உடைத்து மிகுந்த சேதத்தினை உண்டு பண்ணியுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இக்காட்டு யானைகளின் அட்டகாசத்தினால் நெல் விவசாயச் செய்கைகளுக்கு பாதிப்பேற்பட்டுள்ளது





டன், மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகள், மக்கள் உடைமைகள் போன்றவற்றுக்கும் பாரியளவிலான சேதங்கள் ஏற்பட்டுள்தாகவும் தெரிவிக்கப்படுன்றது. இதுதவிர, பொது நிறுவனங்களின் சுற்று மதில்கள், பெருமரங்கள் போன்றவற்றுக்கும் இக்காட்டு யானைகள் சேதத்தினை ஏற்படுத்தியுள்ளன.

அக்கரைப்பற்று தேசிய பாடசாலையின் சுற்று மதிலை மூன்றாவது முறையாகவும் காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ளதாக பாடசாலைச் சமூகத்தினர் சுட்டிக் காட்டினர்.

கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக இரவு வேளைகளில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் இவ்வாறு காட்டு யானைகள் உட்டுபுகுவதனால் மிகுந்த அச்சத்துடனேயே தாம் இரவுப் பொழுதுகளைக் கழித்து வருவதாகவும், சில சந்தர்ப்பங்களில் காட்டு யானைகளை அப்புறப்புடுத்துவதற்காக முயற்சிக்கும் பொதுமக்களையும் காட்டு யானைகள் தாக்கியுள்ளதனால், உயிரச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தாம் வசித்து வருவதாகவும் இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

காட்டு யானைகளின் தொல்லைகளிலிருந்து பாதுகாத்து தம்மை நிம்மதியாக வாழச் செய்ய சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# யானை மற்றும் மனித மோதல் தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல்

(ஏ.பி.எம்.அஸ்ஹர்)

அம்பாறை மாவட்டத்தில் யானை மற்றும் மனித மோதல் தொடர்பான பிரச்சினை தொடர்பில் ஆராயும் உயர் மட்ட கலந்துரையாடலொன்று நேற்று முன் தினம் இடம் பெற்றது.

வன ஜீவராசிகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விமல வீர திசாநாயகவின் தலைமையில் இடம் பெற்ற இவ்வுயர்மட்ட கலந்துரையாடலில் வனவிலங்கு துறை அதிகாரிகள், சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் உள்ளூர் அரசியல் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்

இங்கு மின்சார யானை வேலியை முறையாக பராமரிக்கவும், மின்சார யானை வேலியை கண்காணிக்கவும், காட்டு யானைகள் ஆபத்து இருக்கும் பகுதிகளில் கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கவும், காட்டு யானை தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்குவதை துரிதப்படுத்தவும் அதிகாரிகளுக்கு இங்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.